# DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No.570/2024
Deposition of Witness for L.W.10 / P.W.3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முருகேசன் | | | |
| Father's Name | : | பழனிச்சாமி | Occupation | : | Watchman |
| Village | : | ஊஞ்சலூர் | | | |
| District | : | ஈரோடு | Age | : | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.**01.2026**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**
**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் ஈரோடு ஊஞ்சல் ஊரில் குடியிருந்து கொண்டு, வாட்ச்மேன் (Watchman) ஆக வேலை பார்த்து வருகிறேன். நான் கடந்த 25.05.2019 ஆம் தேதி அன்று. ஈரோட்டில் உள்ள ஜோஸ் ஆலுக்காஸ் நகைக்கடை முன்பு பணியில் இருந்த பொழுது, அங்கு அன்றைய தினம் அதிகாலையில் நடைபெற்ற வாகன விபத்து தொடர்பாக போலீசார் விபத்து நடைபெற்ற இடத்திற்கு வந்து விசாரித்து, படம் வரைந்தார்கள். போலீசார் சாட்சி கையப்பம் போடும்படி கேட்டுக் கொண்டதால் நானும், என்னுடன் இருந்த கோபால் என்பவரும் பார்வை மகஜரின் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். முதலாவது சாட்சி கையொப்பம் கோபால் உடையது. **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

இந்த விபத்தை பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால், இல்லை, எனக்கு தெரியும். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால், சரியல்ல, நான் பார்த்தேன். விபத்து நடந்த சமயத்தில் நான் என்னுடைய பணியில் இருந்தேன் என்றால், ஆமாம். விபத்து நடந்த சமயத்தில், நான் இருந்த இடத்திற்கும் இறந்து போன ராஜலிங்கம் இருந்த இடத்திற்கும் சுமார் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால், சுமாராக 5 அடி இருக்கும். என்னுடன் பணிபுரியும் பாலகிருஷ்ணன் அப்போது எங்கு இருந்தார் என்றால், என் அருகில் தான் இருந்தார். 25.05.2019 ஆம் தேதி அன்று, ஜோஸ் ஆலுக்காஸ் கடையில் என்னுடன் சேர்த்து மொத்தமாக எத்தனை பேர் வாட்ச்மேன் பணியில் இருந்தோம் என்றால், இறந்த நபரையும் சேர்த்து மூன்று பேர் இருந்தோம்.

எதிரி ஓட்டி வந்த வாகனம் எந்த திசையில் இருந்து எந்த திசையை நோக்கி வந்தது என்றால், மேற்கு திசையில் இருந்து கிழக்கு நோக்கி வந்தார். இந்த விபத்தில் எனக்கு ஏதும் காயம் ஏற்படவில்லை என்றால், சரிதான். விபத்து நடக்கும்போது காலை எத்தனை மணி இருக்கும் என்றால், விடியற்காலை 05.30 மணி இருக்கும். மெயின் கேட் அருகில் பணியில் இருந்தது யார் என்றால், நானும், கோபாலும் இருந்தோம். கார் பார்க்கிங் அருகில் யாரெல்லாம் இருந்தோம் என்றால், ராஜலிங்கம் இருந்தார்.

போலீசார் எத்தனை நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள் என்றால், விபத்து நடந்த அன்றைய தினமே விசாரித்தார்கள். நான் சொன்னவாறு விபத்தை நேரில் பார்க்கவில்லை, போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க போலீசுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

<u>**மறுவிசாரணை: இல்லை.**</u>

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.